முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மாசி மாதம் 28 திகதி முதல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05 திகதி வரை

(12.03.2023 ஞாயிறு முதல் 19.03.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானத்தலைவனின் அவதாரமே
   ஞானியே அரங்கமகா ராஜனே
   தானதரும வழிகளை கொண்டே
   தரணியை மாற்றவந்த தேசிகனே
2. தேசிகன் நீ கேட்க இனிதே
   தெரிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
   ஆசிபட சுபகிருது சால்திங்கள் எழுநான்கு திகதிமேல்
   அறிவிக்க சேல்திங்கள் பஞ்சதிகதி வரை
3. வரையிலான நிகழ்வான தேசத்தின்
   வருங்கால பலன் குறித்த ஆசி
   உரைத்திடுவேன் அகத்திய மகரிஷியும்
   உண்மைபட இயற்கை வளம் நிறைந்த
4. நிறைந்த இந்தியா தமிழகத்தில்
   நிலைமைதனை மேலும் உயர்த்தா விட்டாலும்
   **கறை**பட இயற்கையை சுரண்டி
   காப்பில்லா பேரிடர் பூமியாக மாற்றா
5. மாற்றா இயற்கையை காத்து
   மக்களின் வாழ்வாதாரம் ஆன
   ஆற்றல் மிக்க குடிநீர் உணவுக்கு
   அவசியமான எரிபொருள் காற்றுக்கு
6. காற்றுக்கு மாசுபடா வண்ணம்
   களங்கமுற விலைஏற்றா வண்ணம்
   உற்றதொரு தட்டுப்பாடு வாராதபடி
   உயர்வுபட மேலும் கீழுமான ஆளுமைகள்
7. ஆளுமைகள் தயவாய் வழிநடத்தி
   அவசியம் மக்களை காத்திடும்
   ஆளுமைகளாக இயங்கினால்தான்
   அகிலம் வியக்க வளர்ச்சி மாற்றம்
8. மாற்றம் இந்தியா தமிழகம்
   மண்ணுலகில் கண்டு உயரும்
   மாற்றம்தரா சிறுமை கண்டால்
   மாபாதகமான வினைகள் கூடி

9. கூடியே ஆளுமைகட்கு பங்கம்
குளறுபடி பின்னடைவு என
நாடியே ஆளுமைகள் பெருமை
நல்கிடா நசிந்தே போகும்
10. ஆகவே தருமஞான வழிகளை
அறமாக ஏற்றுப் பணிந்து
வகைபட ஆளுமை நடத்திட
வல்லமையான தேசமாக இந்தியா தமிழகம் மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 05ம் நாள் 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஞானத்தின் தலைவனாகிய முருகப்பெருமானின் அவதாரமே மகாஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே தானதருமங்களை செய்து தர்மபலத்தால் இவ்வுலகை மாற்றி ஞானயுகமாக ஆக்கிடவே அவதரித்திட்ட ஞானதேசிகனே அரங்க மகானே தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 05ம் நாள் 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இயற்கை வளம் நிறைந்த இந்தியா தமிழகத்தின் இயற்கை வளத்தினை அதிகப்படுத்தா விட்டாலும் குற்றமில்லை அதைவிடுத்து மேலும் இயற்கை வளங்களை சுரண்டாமல் பாதுகாக்க வேண்டும். இயற்கை வளங்களை அழித்து பேரிடர் பூமியாக ஆக்க வேண்டாம். மக்களுக்கு அத்தியாவசியமான குடிநீர் மற்றும் உணவிற்கு பாதகம் வராமல் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்.

மக்களுக்கு அத்தியாவசியமான எரிபொருளில் இயற்கைக்கு மாசுபடா வண்ணம் கட்டுப்பாடுகளை செய்து மாசற்ற எரிபொருளை தர வேண்டும். மக்களுக்கு துன்பம் நேரும் வகையில் எரிபொருள் விலையை அதிகமாக்காமல் இருக்க வேண்டும் மேலும் எரிபொருள் தட்டுப்பாடு வராமலும் செயல்பட வேண்டும். மத்திய மாநில அரசுகள் மக்கள் மீது தயவுடன் நடந்து மக்களுக்கான அரசாக செயல்பட வேண்டும்.

இவ்விதம் அடிப்படை தேவைகளை தடையின்றி வழங்கினால் இவ்வுலகம் வியக்கும் வகையில் நாடு முன்னேற்றம் அடையும். அதை விடுத்து மக்களின் ஜீவாதாரத்தில் கவனம் செலுத்தாமல் வேறு தேவையற்ற செயல்களினால் நாட்டினில் பாதகமான சூழ்நிலைகள் உருவாகி ஆட்சியர்க்கு சங்கடங்களை உண்டாக்கும் அரசு பின்னடைவை சந்திக்க நேரும். தொடர்ந்து மக்கள் நலனில் அக்கறை கொள்ளாது நடந்தால் ஆட்சியர்கள் பெருமை குன்றி மக்களிடம் நம்பிக்கை இழக்க நேருமப்பா.

ஆதலினாலே தருமஞான வழிமுறைகளை அறமாக ஏற்று பாவபுண்ணியங்களுக்கு மதிப்பளித்து பணிந்து அரசு செய்திட இந்திய தேசமே உலக அரங்கில் வல்லமை மிக்க தேசமாக மாற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–